முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்
மாதிரி வினாத்தாள்-3

11th Standard

**கணக்குப்பதிவியல்**

Reg.No. :

# I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:05:00 Hrs | Total Marks : 50

பகுதி-அ | 5 x 2 = 10

1) வங்கிச் செல்லேடு என்றால் என்ன?
2) வங்கி சரிக்கட்டும் பட்டியல் என்றால் என்ன?
3) எப்போது வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் தயாரிக்கப்படுகிறது?
4) யார் வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயாரிக்கின்றார்?
5) வங்கி சரிக்கட்டும் பட்டியலின் தேவை யாது?

பகுதி-ஆ | 5 x 3 = 15

6) ரொக்க ஏட்டில் அதிக இருப்பினை விளைவிக்கக்கூடிய ஐந்து இனங்களை வரிசைப்படுத்துக.
7) செல்லேட்டில் குறைவான இருப்பை விளைவிக்கக்கூடிய ஐந்து இனங்களை வரிசைப்படுத்துக.
8) ரொக்க ஏடு மற்றும் செல்லேட்டின் இருப்புகள் வேறுபட்டு இருப்பதற்கான காரணங்களைக் கூறுக.
9) ரொக்க ஏட்டிற்கும் செல்லேட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
10) வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

பகுதி-இ | 5 x 5 = 25

11) ரொக்க ஏட்டின்படி சாதகமான இருப்பு கொடுக்கப்பட்டிருக்கும்போது: கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து திருவாளர் இளவரசன் நிறுமத்தின் டிசம்பர் 31, 2003 ஆம் நாளன்று செல்லேட்டின்படியான இருப்பினைக் காணும் வகையில் வங்கி சரிகட்டும் பட்டியல் ஒன்றினை தயாரிக்க.
அ. வங்கியில் செலுத்திய காசோலைகளில் வசூலித்து வரவழைக்கப்படாதவை ரூ.1,500.
ஆ. திரு ராஜுவிற்கு அளித்த காசோலை இதுவரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை ரூ.2,500.
இ. வங்கிக் கட்டணம் செல் ஏட்டில் பற்று செய்யப்பட்டுள்ளது ரூ.200.
ஈ. வங்கி அனுமதித்த வட்டி ரூ.100.
உ. நிலை ஆணையின்படி வங்கியால் நேரடியாக செலுத்தப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் ரூ.500.
ஊ. ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.200.
12) செல்லேட்டின்படி சாதகமான இருப்பு கொடுக்கப்பட்டிருக்கும்போது:
திருமதி. ஜேம்ஸ் செல்லேடு 2003 ஜூன் 30ல் வங்கியிருப்பு ரூ.25,000 காட்டிற்று. அவருடைய ரொக்க ஏடு வேறுபாடான இருப்புநிலையை காட்டிற்று. சரிபார்த்ததில் கீழ்காணும் விவரங்கள் கிடைத்தன.
அ. காசோலை அவமதிக்கப்பட்டது ரூ.250 ரொக்க ஏட்டில் பதியவில்லை.
ஆ. ஜூன் 28, 2003 இல் வங்கியில் செலுத்திய காசோலை ரூ.3,500 செலேட்டில் பதிவு காணப்படவில்லை.
இ. வங்கிக் கட்டணம் ரூ.300 ரொக்க ஏட்டில் பதியவில்லை.
ஈ. செல்வி. தேவி அவர்களுக்கு விடுத்த காசோலைகள் ரூ.9,000 பணமாக்கப்படவில்லை.
உ. திரு. பாலு தான் செலுத்த வேண்டிய ரூ.3,000 ஐ நேரடியாக வங்கியில் செலுத்தினார்.
வங்கிச் சரிக்கட்டு பட்டியல் தயாரிக்க. மேலும் ரொக்க ஏட்டின் இருப்பினைக் கணக்கிடுக.
13) கீழ்காணும் விவரங்களைக் கொண்டு திருவாளர்கள் ஜோதி தனி நிறுமத்தின் ஜூன் 30, 2003 ஆம் நாளுக்கான வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்க.
அ. ரொக்க ஏட்டின்படி மேல்வரைப்பற்று ரூ.1,10,450.
ஆ. ஜூன் 20, 2003ல் விடுத்த காசோலைகள் பணமாக்கப்படாதவை ரூ.15,000.
இ. செலுத்திய காசோலைகள் ரூ.22,750 இன்னும் வங்கியில் பற்று வைக்கப்படவில்லை.
ஈ. பெறுவதற்குரிய மாற்றுச்சீட்டு ரூ.47,200 ஐ வங்கி நேரடியாக வசூலித்தது.
உ. மேல்வரைப்பற்றின் மீதான வட்டி ரூ.12,115 வங்கியால் பற்றுவைக்கப்பட்டது.
ஊ. தவறுதலாக வங்கியால் வரவு பத்தியில் பதியப்பட்டது ரூ.2,400.
14) செல்லேட்டின்படி மேல்வரைப்பற்று இருப்பு கொடுக்கப்பட்டிருக்கும்போது:
திருமதி. ஹரிதா அவர்களுடைய வாங்கி கணக்குப் பற்றிய விவரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அது 2003 மார்ச் 31 ஆம் நாளன்று மேல்வரைப்பற்று இருப்பு ரூ.6,500 காட்டியது. இது ரொக்க ஏட்டின் இருப்போடு ஒத்துப்போகவில்லை.
அ. வங்கியில் செலுத்திய ரூ.15,000ற்கான காசோலைகளில் ரூ.4,500 மட்டுமே வங்கியால் வரவு செய்யப்பட்டுள்ளது.
ஆ. மார்ச் மாதத்தில் விடுத்த ரூ.11,000 மதிப்புள்ள காசோலைகளில், ரூ.3,000 மதிப்புள்ள காசோலை மட்டும் 2003 மார்ச் 30 வரை செலுத்தப்படாமல் உள்ளது.
இ. பிரிதொரு கணக்கின்பேரில் எழுதப்பட்ட காசோலை ரூ.500 ஆனது தவறுதலாக இக்கணத்தில் வங்கி பற்று செய்துள்ளது.
ஈ. இக்கணக்கில் வட்டிக்காக ரூ.150ம், வங்கிக் கட்டணத்திற்காக ரூ.30ம், கணக்கில் பற்று செய்யப்பட்டுள்ளது.
உ. நிலை ஆணையின்படி மன்றத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டு சாந்த தொகை ரூ.100 ஐ வங்கி செலுத்தியது. ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பினைக் கண்டுபிடிக்க.

15) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியும் செல்லேடும் கொடுக்கப்பட்டிருக்கும்போது:

ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தி மற்றும் செல்லேட்டிலுள்ள பதிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 2003 ஆகஸ்ட் 31 இல் திரு. சேகரின் வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்க.

**ப ரொக்க ஏடு (வங்கிப் பத்தி) வ**

| நாள் | விவரம் | தொகை ரூ. | நாள் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 2003 | | | | | |
| ஆக.1 | இருப்பு கீ/கொ | 20,525 | ஆக.8 | கோகிலா | 12,000 |
| 18 | சங்கர் | 6,943 | 26 | கீதா | 9,740 |
| 19 | விற்பனை (ராஜன்) | 450 | 28 | லதா | 11,780 |
| 20 | கழிவு (பாபு) | 200 | 30 | சம்பளம் (அமலா) | 720 |
| 20 | நிர்மலா | 7,810 | 31 | இருப்பு கீ/இ | 1,680 |
| | | 35,928 | | | 35,928 |
| Sep 1 | இருப்பு கீ/கொ | 1,688 | | | |

**செல்லேடு**

| தேதி | விவரம் | பற்று எடுப்புகள் ரூ. | வரவு வைப்புகள் ரூ. | இருப்பு |
|---|---|---|---|---|
| 2003 | | | | |
| ஆக.1 | இருப்பு கீ/கொ | | | 20, 525 வ |
| 9 | கோகிலா | 12,000 | | 8,525 வ |
| 19 | சங்கர் | | 6,943 | 15,468 வ |
| 25 | ராஜன் | | 450 | 15,918 வ |
| 26 | கீதா | 9,740 | | 6,178 வ |
| 27 | பாபு | | 200 | 6,378 வ |
| 28 | அமலா | 720 | | 5,658 வ |
| 30 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | | 20,000 | |
| | வட்டி | | 25 | |
| | முதலீடு மீதான வட்டி | | 1,820 | 27,503 வ |
| 31 | செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டு | 4,000 | | 23,503 வ |

****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in